Arrears on account of Thulasi Archana to Sri Ranganathaswamy Temple.

*462 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether representations have been received recently by the Department of Hindu Religious and Charitable Endowments to collect the arrears of the Thulasi Archana due to Sri Ranganathaswamy temple, Srirangam from Kodaraigulam Inam Estates, Ambasamudram in 1970 ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ஸ்ரீரங்கத்தைப்பற்றி, ஒரு கேள்வி கேட்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இப்படி "அரியர்ஸ்" இருக்கின்ற காரணத்தினால், அந்த அரியர்ஸை வாங்க அரசாங்கமே ஏன் முன் வரவில்லை? அந்த அரியர்ஸ் ஸ்ரீரங்கநாத சுவாமிக்கு துளசி அர்ச்சனை மூலம் வரக்கூடிய ஒன்று என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அம்பா சமுத்திரம், கோதரைகுளம் இனம் எஸ்டேட்டுகளிலிருந்து 21 எக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான பட்டா கோயிலுக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்த அறநிலையத்துறை சார்பாக நடவடிக்கை எடுத்த பொழுது, திருவாடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தவர்கள் அந்த நிலத்தை வாங்கி இருப்பதாகத் தெரியவந்தது. இந்த அறநிலையத்தார் "இனம் விசாரணை" மூலம் அந்த நிலம் ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்குத்தான் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால், இந்த உத்தரவை எதிர்த்துத்தான் திருவாடுதுறை ஆதீனத்தார் ஹைகோர்ட்டிலே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். எனவே, இதிலே பொறுத்திருந்துதான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கநாதருக்கு கொடுக்க வேண்டிய கடன் இது. அதிலே திருவாடுதுறை ஆதீனம் கோர்ட்டுக்கு போயிருக்கிறார்கள் என்றால், இது நியாயமான முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கொடுக்க வேண்டிய கடன் பாக்கிக்காக அவர்கள் கோர்ட்டுக்குப் போகவில்லை. ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு 21 ஏக்கர் நிலத்தை பட்டா வழங்கப்படுவதற்காக அறநிலையத்துறை ஆனது நடவடிக்கை எடுக்கும் நேரத்திலே, திருவாடுதுறை ஆதீனத்திற்கு அந்த நிலம் சம்மந்தமாக பட்டா வழங்கப்பட்டிருக்கிறது, அப்படிப்பட்ட பட்டா ஸ்ரீரங்கநாத சாமிக்குத் தான் வழங்கப்பட வேண்டுமென்று நாம் மேல் அதிகாரிகளிடத்திலே முறையிட்டுக் கொண்டோம். உடனே, திருவாடுதுறை ஆதீனத்தார் எங்களுக்குத் தான் அப்படி பட்டா பெற உரிமை இருக்கிறது என்று ரிட் மனு செய்து, ஹைகோர்ட்டு மூலமாக "ஸ்டே" வாங்கியிருக்கிறார்கள். எனவே, அது யாருக்குச் சேர்ந்தது என்பதை

ஹைக்கோர்ட்டு தான் முடிவு செய்ய முடியும். அந்த நிலத்தின் ஸ்வாதீனம் நம் கையிலே வரவில்லை. அது வந்தால் தான் குத்தகை பாக்கியை நாம் வசூலிக்க முடியும்.

திருமதி ஜோதி வெங்கடாஜலம்: திருவாடுதுறை ஆதீனத்திற்கு வேண்டிய சொத்து இருக்கிறது. எனவே, ஸ்ரீரங்கநாதசுவாமியின் சொத்திலே அவர்கள் கை வைப்பது நல்லதல்ல. எனவே, இதிலே இந்த அரசாங்கத்தின் நோக்கம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேராக இந்த யோசனையை திருவாடுதுறை ஆதீனத்திற்கு எடுத்துச் சொல்லி, அந்த நிலத்தை ஸ்ரீரங்கநாதசாமிக்கு மீட்டுத் தந்தால் நன்றாக இருக்கும்.

திரு. கு. காமாட்சி: ஸ்ரீரங்கநாதர் முன்பு ஏழையாக இருந்தார். அப்பொழுது சமயபுரம் மாரியம்மன் உதவி அவருக்குத் தேவைப் பட்டது. இப்பொழுது அந்தத் தாய் ஏழையாகி விட்டாள். எனவே, தயவு செய்து சமயபுரம் மாரியம்மாளை ஸ்ரீரங்கநாதசாமி தேவஸ்தானத்திலே இருந்து பிரிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக சமயபுரம் ஆத்தாளை ஸ்ரீரங்கநாதசுவாமி தேவஸ்தானத்திலே இருந்து பிரிக்க ஏதாவது உத்தேசம் உண்டா என்று கேட்டால் போதுமானது. இந்த அவையிலே கூட, சில அமைச்சர்கள் சுருக்கமாகப் பதில் அளிக்கிறார்கள். இன்னும் சில அமைச்சர்கள் "விவர அறிக்கையை" வைத்துவிட்டு கூட நீண்ட நேரம் பேசுகிறார்கள். விவர அறிக்கையை வைத்துவிட்டால் நீண்ட நேரம் பேச வேண்டியதில்லை. எனவே, உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகச் சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்பேர்ப்பட்ட கோரிக்கைகள் அறநிலையத் துறைக்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கத்தின் பரிசிலனையிலே இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: துளசி அர்ச்சனை மூலம் அரியர்ஸ் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படி எத்தனை வருஷமாக அரியர்ஸ் இருந்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துளசி அர்ச்சனைக்காக ஸ்ரீரங்கநாதசாமி தேவஸ்தானத்திற்கு 21 ஏக்கர் நிலம் நெல்லை மாவட்டத்திலே இருந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலத்தின் ஸ்வாதீனமும், அனுபவ பாத்தியதையும் நமக்கு வரவில்லை. நிலமும், அந்த நிலத்தின் அனுபவ பாத்தியதை வர வேண்டுமென்பதற்காகத் தான் நாம் திருவாடுதுறை ஆதீனத்தை எதிர்த்து ஹை கோர்ட்டிலே வாதாடி வருகிறோம். நிலம் நம்முடைய அனுபவத்திற்கு வந்ததற்குப் பிறகு தான், குத்தகை முறை பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படி ஆண்டவன் விவகாரங்களிலே கோர்ட்டுக்குப் போகும்பொழுது நல்ல நிலைமையிலே